## ஆடித்து முத்துக்கள் 39

# கலைஞர் இளவாலை எஸ்.ஜேசுரட்னம்

**- கே.எஸ். பாலச்சந்திரன் -**

என் அருமை நண்பரும் சககலைஞருமான இளவாலை எஸ்.ஜேசுரட்னம் பிரான்ஸ் நாட்டில் காலமானார் என்ற செய்தி நவம்பர் 27ந்திகதி அதிகாலையில் எனக்கு கிடைத்தது. என்னுடைய நீண்டகால கலையுலக நண்பரின் இழப்பு. பல நினைவுகளை என் மனதில் தோற்ற வைத்தது.

நான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலும், அவர் நில அளவைத் திணைக்களத்திலும் கொழும்பில் பணியாற்றிக்கொண்டிருந்த காலம். பொதுவாக அரசாங்க திணைக்களங்களில் நிறைய கலைஞர்கள் அக்காலத்தில் இருந்தார்கள். தனியார் நிறுவனங்களை விட, அரசாங்க திணைக்களங்களில் கிடைத்த வசதிகளும், சுதந்திரமும் இதற்கு காரணமாக இருக்கலாம்.



நில அளவைத்திணைக்களத்தில் ஜேசுரட்னத்தோடு, வாடைக்காற்று திரைப்படத்தின் உருவாக்கத்திற்கு காரணமான ஏ. சிவதாசனும் பணியாற்றிக்கொண்டிருந்தார். இவர்களோடு அங்கே வேலை பார்த்த இன்னுமொருவர்தான் பின்னர் தென்னிந்திய சினிமாத்துறையிலே கொடிகட்டிப்பறந்த பாலு மகேந்திரா.

சிவதாசன் கமலாலயம் கலைக்கழகம் என்ற நாடக மன்றத்தை நிறுவி நாடகங்கள் போட்டுக்கொண்டிருந்தார். எஸ்.எஸ். கணேசபிள்ளையும், நானும் வேறுமன்றத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சிவதாசன் அழைத்தால் அவரது மன்ற நாடகங்களிலும் நடிப்போம். அவரும் அவரது மன்ற நடிகர்களும் எங்கள் நாடகங்களில் நடிப்பார்கள். இப்படி நடிக்கும் போதுதான், சிவதாசன் மூலம் ஜேசுரட்னம் எங்களுக்கு அறிமுகமானார். வாட்டசாட்டமான தோற்றம், உரத்த தொனி, முறுக்கிய மீசை இவற்றுடன், அசல் கிராமத்து நிலச்சுவாந்தார் போன்ற தோற்றம். நானும் அவரும் இணைந்து நடித்த முதல் நாடகம், 'பாசச்சுமை' என்பதாகும். (இத்தொடரில் முந்திய கட்டுரையொன்றில் இந் நாடகத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறேன்)

அவருக்கு பணக்கார தந்தை வேடம். நான் அவரது சம்பந்தியான ஏழைத்தகப்பனாக நடித்தேன். இந்த நாடகம் மிகுந்த வரவேற்பைப்பெற்றது. இதற்கு பிறகு பணக்கார வேடம் என்றவுடன் 'அழையுங்கள் ஜேசுரத்தினத்தை' என்று எல்லா நாடக மன்றக் காரரும் சொல்லத்தொடங்கினார்கள்.

இவ்வாறாக தொடர்ந்து கே.எம்.வாசகர், எஸ். ராம்தாஸ் ஆகியோரின் மேடை நாடகங்களிலும் நடித்தார். அங்கேயும், சுங்கான் வாயில் வைத்து புகைபிடிக்கும், நுனிநாக்கு ஆங்கிலம் பேசும் பணக்கார தகப்பன் வேடம் தான். இந்த முத்திரை 'வாடைக்காற்று' திரைப் படத்தில் நடிக்கும்போதுதான், ஜேசுரட்னத்தை விட்டு அகன்றது. இதைப் பின்னர் விளக்குகின்றேன்.

இந்த மேடைநாடகக் காலத்திலேயே, ஜேசுரத்தினம் இலங்கை வானொலி நாடகங்களில் நடிக்கத் தொடங்கிவிட்டார். அந்நாட்களில் இலங்கை வானொலி தமிழ்ச்சேவையில் தேசியசேவை, வர்த்தகசேவை, கிராமியசேவை என்ற பிரிவுகள் மூன்றிலுமே நாடகங்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன.

எங்களைப்போன்ற நடிகர்கள் தேசியசேவையிலும், வர்த்தகசேவையிலும் நாடகங்கள் நடிப்பதில் கவனம் செலுத்திக்கொண்டிருக்க, இளவாலை எஸ்.ஜேசுரட்னம் கிராமிய சேவை நாடகங்களில் தனிக்காட்டு ராசாவாக விளங்கினார்.

'முகத்தார் வீடு' என்ற கிராமியச் சேவை தொடர்நாடகத்தில் அவர்தான் முகத்தார். கிராமிய வழக்கில் உள்ள சொற்களை லாவகமாக பேசிக்கொண்டு, வாகடம் என்ற கிராமிய சித்தமருத்துவப் பாடல்களை மூச்சு விடாமல் அவர் சொல்வதே தனி அழகு. அவருக்கென்றே தனி ரசிகர்கூட்டம் இருந்தது.

இடையிடையே வர்த்தகசேவை, தேசியசேவை நாடகங்களில் எங்களோடு வந்து நடித்தாலும், கிராமியசேவைதான் அவரது ஆஸ்தானமாக இருந்தது. அப்படி விதிவிலக்காக அவர் அரிதாக நடித்த வர்த்தகசேவை நாடகத்தில் ஒன்றுதான், சில்லையூர் செல்வராஜனின் 'தணியாத தாகம்'.

அந்த நாடகத்தின் 'மணியம் ஐயா' என்ற பாத்திரத்தில் ஜேசுரட்னம் நடித்தார். இறுதிக் கட்டத்தில் கதாநாயகன் சோமு தன் தங்கையின் இழப்பில் அவரையும் அழைத்து தன் சோகத்தை பங்கிட்டுக்கொள்ளும் கட்டத்தில் நானும், அவரும் நடித்தோம்.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல நானும், அவரும் இணைந்து நடித்த 'வாடைக்காற்று' திரைப்படம் அமைந்தது. 1977ல் தயாரான இந்தப்படத்தில் பொன்னுக் கிழவராக, எனது பாட்டனாராக அவர் நடித்தார். நான் விருத்தாசலம் என்ற இளைஞனாக, அவரது பேரனாக நடித்தேன்.

'வாடைக்காற்று' திரைப்படத்தின் ஆரம்பமே, நாங்கள் வாழும் தீவுக்கு, வெளியூர் மீனவர்கள் வருகையை அவர் பார்ப்பதிலேதான் ஆரம்பிக்கிறது. படத்தில் மிகமுக்கிய பங்கை அவர் வகித்தார்.

வெளியிடுவதற்கு முன்னதாக, படத்தைப் பார்த்த தென்னிந்திய நடிகர் மேஜர் சுந்தரராஜன், எங்கள் இருவரினதும் நடிப்பை மலையாள நடிகர்களின் நடிப்பைப் போல யதார்த்தமக இருந்ததாக பாராட்டியது எனது ஞாபகத்திற்கு வருகிறது.

இந்தப்படத்தின் படப்பிடிப்பில், அவரது பேத்தி, எனது முறை மைத்துனி பாத்திரம் (நாகம்மா) எங்களை ஏமாற்றமடையச்செய்து போய்விட்டபின் வரும் ஒரு நீண்டகாட்சியில் சோகமயமாக நாங்கள் இருவரும் ஒரே மூச்சில் பேசி நடித்தது மறக்கமுடியாத அனுபவம். அந்தக் காட்சி படப்பிடிப்பு முடிந்ததும் தொழில்நுட்பக் கலைஞர்கள் கரகோசம் எழுப்பினார்கள்.

படம் வெளிவந்தபின்னர் விமர்சனங்களும் அப்படியே வந்தன. 1978ம் ஆண்டின் சிறந்த தமிழ்ப்படமாக 'வாடைக்காற்று' தெரிவு செய்யப்பட்டது, சிறந்த துணை நடிகர் விருது எஸ். ஜேசுரட்னத்துக்கு கிடைத்தது.

வழக்கமான பணக்காரத் தகப்பன் பாத்திரத்திலிருந்து, முற்றிலும் மாறுபட்ட மீன்பிடிக் கிராமத்து முதியவராக நடித்து ஜேசுரட்னம், தனது வழக்கமான முத்திரையை அகற்றிக் கொண்டார். அதில் வெற்றியும் கண்டார்.

இதைத்தொடர்ந்து எஸ்.ராமதாஸின் 'ஏமாளிகள்' படத்திலும் ஜேசுரட்னம் நடித்திருந்தார்.


காலப்போக்கில் பிரான்ஸ் நாட்டிற்கு புலம் பெயர்ந்த ஜேசுரட்னம் அங்கும் தன் கலை முயற்சிகளைத் தொடர்ந்தார். வானொலியிலும், திரைப்படங்களிலும் நடித்தார்.

தனக்கு 'முகத்தார்' என்ற அடைமொழியைத் தந்த 'முகத்தார் வீடு' வானொலி நாடகத்தையே தொலைக்காட்சிப் படமாக எழுதி, நடித்தார். கலைஞர் இரா.குணபாலன் தயாரித்த இப்படம் ஐரோப்பாவில் காண்பிக்கப்பட்டது.

வானொலி நாடகமாக 'முகத்தார் வீட்டை' அவர் எழுதிய காலத்தில், நாடகப்பிரதிகளை அழகாகத் தொகுத்துக் கட்டி வைத்திருந்தார். நூற்றுக்கணக்கான அங்கங்கள் கொண்ட அந்தத் தொகுப்பை எனக்குக் காட்டி குழந்தைபோல பெருமைப்பட்டுக் கொண்டது நினைவுக்கு வருகிறது.

2006ம் ஆண்டு ஜுலை மாதம் 3ந் திகதியன்று எனது 'வை.ரி.லிங்கம்' ஷோவின் 100வது நிகழ்ச்சி குறித்த விழாவின்போது எனக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சி கிட்டியது. ரி.வி.ஐ.யின் ஏற்பாட்டில் அந்த விழாவின் சிறப்பு அதிதியாக, எஸ்.ஜேசுரட்னம் கலந்து கொண்டதோடு, எனக்கு விருது வழங்கி என்னை வாழ்த்திச் சென்றார்.

நீண்டகால இடைவேளையின் பின் அவரைச் சந்திக்க நேர்ந்ததும், தன் சக கலைஞனை பாராட்டுவதற்காக, தன் உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது அவர் வந்ததும் என் நினைவை விட்டு அகலாத ஒன்று.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

## துயர் பகிர்வோம்



**'முகத்தார்'**
**திரு.சந்தியாப்பிள்ளை ஜேசுரட்னம்**

சுருவிலைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும், தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான எழுத்தாளரும், வானொலி, மேடை, திரைப்பட நடிகருமான 'முகத்தார்' திரு. சந்தியாப்பிள்ளை ஜேசுரட்னம் அவர்கள் 27.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை – மரியப்பிள்ளை இணையரின் புதல்வரும், வில்லவரசிங்கம் - அன்னம்மா இணையரின் மருமகனும், காலஞ்சென்ற அயறின் அவர்களின் கணவரும் கலாராணி, பிரேம்ராஜ், காலஞ்சென்ற மகாராஜ், ஜீவராணி, செல்வராஜ் ஆகியோரின் தந்தையும் லோகநாயகம், மலர், பிறேமிளா, மானல், மரியதாஸ், மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும் ஜோயல், மார்ஷல், ஜனியல் - மிஷேல், ஸ்ரெபன் - நியோமி, ஜெறா, ஜஸ்மின், ஜெய்வின், கெவின், ஷேர்ளி, குளோறியா, பீலிக்ஸ், டானியல், அலன், ஜெனாலின், ஆஞ்சலின், லவ்லின் ஆகியோரின் பேரனும் செபோராவின் பூட்டனுமாவார்.

| | | |
|---|---|---|
| கலா, லோகநாயகம் | 0620315067 | 0622063416 |
| ஜீவா, மரியதாஸ் | 0624833615 | 0139870838 |
| டானியல் | 0624815057 | |
| செல்வா | 0667204129 | |